| Article Date | Headline / Summary | Publication |
|---|---|---|
| 28 Dec 2025 | Colds, coughs, infectious diseases... will health Insurance help with winter ill ness costs? | Nanayam Vikatan |





# சளி, இருமல், தொற்று நோய்... குளிர்கால நோய் செலவுகளுக்கு மருத்துவக் காப்பீடு உதவுமா?

இந்தியாவில் ஏற்படும் பல மரணங்களுக்குத் தொற்று நோய்கள் முக்கியக் காரணமாக இருக்கின்றன. தொற்று நோய்களின் பாதிப்பு ஆண்டின் அனைத்துக் கால கட்டங்களிலும் ஏற்படுவதற்குச் சாத்தியம் உள்ளபோதிலும், குளிர்காலத்தில் அதன் பாதிப்பு அதிகமாக இருக்கும். மார்கழி மாதம் தொடங்கியுள்ள இந்தக் காலகட்டத்தில் தொற்றுநோய்ப் பரவல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

அமர்நாத் சக்சேனா,
வணிகத் துறை - முதன்மை தொழில்நுட்ப அதிகாரி
பஜாஜ் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடெட்




#### குளிர்காலத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் நோய்கள்...

தட்டம்மை, அம்மைக்கட்டு, சின்னம்மை மற்றும் பல வகையான காய்ச்சல்கள் இந்தக் குளிர்காலத்தில் பரவுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. தடுப்பூசி போட்டுக் கொள்வதன் மூலம் அதன் பாதிப்புகளில் இருந்து நம்மைத் தற்காத்துக்கொள்ள முடியும்.

கல்லீரல் அழற்சி மற்றும் அது தொடர்பான பல்வேறு நோய்கள் குளிர்காலத்தில் அதிகப் பாதிப்பை ஏற்படுத்தும். சுவாச நோய்த் தொற்றுகளும் இந்தக் காலகட்டத்தில் அதிகரிக்கும். இன்ஃப்ளூயன்ஸா, நிமோனியா போன்ற நுரையீரலை பாதிக்கும் நோய்த் தொற்றுகள் தீவிரமான உடல் பாதிப்புகளுக்கும், உட்சபட்சமாக உயிரிழப்புகளுக்கும் முக்கியக் காரணமாக இருக்கின்றன. மேலும், ஆஸ்துமா, நுரையீரல் நோய் போன்றவை ஏற்படுத்தும் மன அழுத்தம் காரணமாக இதயப் பிரச்னைகளும் இக்காலகட்டத்தில் அதிகரிக்கும்.

#### மருத்துவக் காப்பீடு...

நோய்களிடமிருந்து தற்காத்துக் கொள்வது ஒருபுறமென்றால், அதற்கான செலவுகளை ஈடுகட்டுவது என்பது பெரும் பிரச்னையாக இருக்கிறது. நோய்க்கு எதிரான முன்னெச்சரிக்கை நடவடிக்கை, நோய் கண்டறிதல், சிகிச்சை, நோய் காக்கும் மருந்துகள், மருத்துவமனையில் தங்கி சிகிச்சை எடுப்பது, அவசர காலச் சிகிச்சை, நோய்க்கு முந்தைய மற்றும் பிந்தைய மறுவாழ்வு போன்ற பல்வேறு செலவுகள் இந்தக் காலகட்டத்தில் அதிகரிக்கும். இந்தச் செலவுகளில் இருந்து தற்காத்துக்கொள்வதற்கும், தகுந்த நேரத்தில் சரியான சிகிச்சை கிடைக்கவும் மருத்துவக் காப்பீடு அவசியம். அது, கேடயமாக இருந்து ஒருவரை நிதிச் சிக்கல்களில் இருந்து பாதுகாக்க உதவிடும். மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பின்வரும் அம்சங்கள் குளிர்கால நோய்களைச் சிறப்பாக நிர்வகிக்க உதவுகின்றன:

#### வருமுன் காப்பது...

பெரும்பாலான மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்கள், இலவசமாக வருடாந்தர உடல்நலப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் வசதியை வழங்குகின்றன. மேலும், சில வகைத் தடுப்பூசிகளுக்கான செலவுகளை ஏற்றுக் கொள்கின்றன. இதன் மூலம் விரைவாக நோயைக் கண்டறிவதுடன் அதை வராமல் தடுக்கவும் முடியும்.

#### டெலிமெடிசன், மருத்துவர் ஆலோசனை...

பல மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்கள், வீட்டில் இருந்தபடியே மருத்துவரை கலந்தாய்வு செய்யும் வசதியை வழங்குகின்றன. இது குறைந்த பாதிப்புகளை ஏற்படுத்தும் குளிர்கால நோய்களிலிருந்து தற்காத்துக் கொள்ள உதவுகிறது.

#### வெளி நோயாளிகளுக்கான காப்பீடு...

பெரும்பாலான மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்கள், வெளி நோயாளிகளுக்கான காப்பீட்டை பொதுவான திட்டத்தில் வழங்குகின்றன. ஒரு சில காப்பீட்டு நிறுவனங்கள் இதை ரைடர் பாலிசியாக வழங்குகின்றன. பெரும்பாலான குளிர்காலக் காய்ச்சல்களுக்கு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய அவசியம் ஏற்படாது.

இந்த மருத்துவக் காப்பீடு எடுத்துக் கொள்வதன் மூலம் மருத்துவக் கலந்தாய்வுக்கான கட்டணங்கள், நோய் கண்டறியும் சோதனைகள், மருந்துச் செலவுகளுக்கு நாம் கையில் இருந்து பணம் செலவழிக்கத் தேவையில்லை. இதன் காரணமாகப் பெரும்பாலான அடிப்படை மருத்துவச் செலவுகளுக்கு முழுமையான காப்பீடு நமக்குக் கிடைக்கும். அதனால், காப்பீடு எடுக்கும்போது இந்த வசதி உங்கள் பாலிசியில் இருக்கிறதா என்று கேட்டு அறிந்து உறுதி செய்து கொள்வது நல்லது.

#### உள் நோயாளிகளுக்கான காப்பீடு...

நிமோனியா, நுரையீரல் தொடர்பான நோய்கள் அல்லது கடுமையான காய்ச்சல்களுக்கு 24 மணி நேரத்திற்கு மேல் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை

## தொற்று நோய்களை நிர்வகிக்க நடவடிக்கை..!

குளிர்காலத்தில், மத்திய சுகாதார அமைச்சகம் தொற்று நோய்களை நிர்வகிக்கப் பல்வேறு தயார் நிலை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி உள்ளது. இன்ஃப்ளூயன்ஸா போன்ற நோய் பாதிப்புகள் மற்றும் கடுமையான சுவாச நோய் பாதிப்புகளைத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது. செயற்கை நுண்ணறிவு, இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மூலம் இந்தக் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இந்த முன்னெச்சரிக்கை அணுகுமுறை மூலம் தட்பவெப்ப நிலை தொடர்பான நோய்களின் தீவிர பாதிப்பை குறைக்க முடிகிறது. மேலும், பாதுகாப்பு நடவடிக்கைகளின் அவசியத்தை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் மேற்கொண்டு வருகிறது.

எடுத்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படலாம். சரியான மருத்துவக் காப்பீடு எடுத்துக்கொள்வதன் மூலம் மருத்துவமனையில் தங்கி இருக்கும் அறை வாடகை, மருத்துவர் ஆலோசனை கட்டணம், நர்சிங் கட்டணம், நோய் கண்டறியும் சோதனைகள் போன்ற அனைத்துச் செலவுகளையும் காப்பீடு மூலம் பெற முடியும். மேலும், குறிப்பிட்ட காலத்துக்கு மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை எடுத்துக்கொள்ளும் நாள்களுக்கு முந்தைய மற்றும் பிந்தைய செலவுகளைக் காப்பீடு மூலம் பெற்றிட முடியும்.

உதாரணத்துக்கு, மருத்துமனையில் தங்கி சிகிச்சை எடுப்பதற்கு முன்பு 30 நாள்கள் வரை மற்றும் சிகிச்சை எடுத்த பிறகு 60 முதல் 90 நாள்கள் வரை ஏற்படும் மருத்துவச் செலவுகளுக்கும் காப்பீட்டின் பலன்கள் கொடுக்கப்படலாம். ஆரம்ப நிலையில் ஏற்படும் பல்வேறு செலவுகள், மருத்துவச் சோதனைகள், மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆன பிறகு மீண்டும் வெளி நோயாளியாக எடுத்துக்கொள்ளும் சிகிச்சை செலவுகள், மருந்துக்கான செலவுகள் இதில் அடங்கும்.

### கட்டணமில்லாத சிகிச்சை...

'ஐ.ஆர்.டி.ஏ.ஐ' (*IRDAI- Insurance Regulatory and Development Authority of India*), அனைத்துக் காப்பீட்டு நிறுவனங்களும் கட்டாயம், கட்டணமில்லாத சிகிச்சை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. இதன் காரணமாக ஆபத்துக் காலங்களில் பணத்துக்காகச் சிரமப்பட வேண்டிய தேவை இல்லை. மேலும், காப்பீட்டு நிறுவனங்கள் பல்வேறு மருத்துவக் குழுமங்களுடன் இணைந்து இது தொடர்பான வசதிகளை வழங்குகின்றன. கோ பேமென்ட் மற்றும் விலக்குகள் (*Deductibles*) போன்ற நிபந்தனைகள் இல்லை என்றால் மொத்தச் செலவுகளையும் கேஷ்லெஸ் வகையில் பயன்படுத்திக் கொள்ள முடியும். மேலும், ஒரு சில மருத்துவச் செலவுகள், காப்பீட்டு நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வையாக இல்லாதபட்சத்தில், அவற்றைக் கையிலிருந்து செலுத்த வேண்டும். அதனால், மருத்துவக் காப்பீடு எடுக்கும்போது அனைத்து நிபந்தனைகளையும் படித்துத் தெரிந்துகொண்டு, சரியான காப்பீடை எடுப்பது மிகவும் அவசியம்.

### மன நிம்மதி...

மருத்துவச் செலவை, மருத்துவக் காப்பீட்டு நிறுவனம் கேஷ்லெஸ் வசதி மூலம் செலுத்தி விடுவதால், பணம் புரட்ட வேண்டும் என்கிற நெருக்கடி எதுவும் இல்லாமல் மிகுந்த மன அமைதி பாலிசிதாரருக்கு ஏற்படுகிறது. மேலும், பல்வேறு மருத்துவ ஆவணங்களைச் சேகரித்து அதைக் காப்பீடு நிறுவனங்களுக்குச் சமர்ப்பிப்பது போன்ற வேலைகளை மருத்துவ மனையே செய்துவிடுவதால், பாலிசிதாரர் மற்றும் குடும்பத்தாருக்கு வேலை மிச்சமாகிறது. ஒருவர், தன் உடல் நலத்தை பாதுகாப்பதை உறுதி செய்வதற்குச் சரியான நேரத்தில் தடுப்பூசிகள் போடுவது, ஆரோக்கிய மான வாழ்க்கை முறையை வகுத்துக் கொள்வது, விரிவான மற்றும் முழுமையான மருத்துவக் காப்பீட்டை எடுத்துக்கொள்வது ஆகியவை மிகவும் அவசியமான விஷயங்கள். ●